தொல்காப்பியச் செய்யுளியல்

இருசூத்திர விளக்கம்

விளக்கியவர்

பூ. கு. குப்புசாமிராஜா

இராஜபாளையம்.

வெளியிடுவோர்

மணிமேகலை மன்றம்

இராஜபாளையம்.

தொல்காப்பியச் செய்யுளியல்

இருசூத்திர விளக்கம்

விளக்கியவர்

பூ. கு. குப்புசாமிராஜா
இராஜபாளையம்

மணிமேகலை மன்றம்
இராஜபாளையம்



திரு பூ. கு. குப்புசாமிராஜா அவர்கள்

இராஜபாளையம்

தொல்காப்பியம். பொருளதிகாரம்
செய்யுளியல், சூத்திரங்கள்

ஐவகை யடியும் விரிக்குங் காலை
மெய்வகை யமைந்த பதினேழ் ●நிலத்த
எழுபது *வகையின் வழு விலவாகி
அறுநூற் றிருபத் தைந்தாகும்மே

●நிலத்தும் *வகையின்

* * *

மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே
ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டு தலையிட்ட பத்துக் குறை எழுநூற்
°றொன்பஃ தென்ப உணர்ந்திசி னோரே

°ஒன்று மென்ப

---

* * *

பன்மொழிப் புலவர்
தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
துணைவேந்தர்
மதுரைப் பல்கலைக் கழகம்
மதுரை

இராசபாளையம் மணிமேகலை மன்றத்தின் சார்பாகத் திரு பூ. கு. குப்புசாமிராஜா அவர்கள் தொல்காப்பிய பொருளதிகாரம் செய்யுளியலில் வரும் ''மெய்பெறுமரபின்'' எனத் தொடங்கும் சூத்திரத்திற்கும் 'ஐவகையடியும்' எனத்தொடங்கும் சூத்திரத்திற்கும் ஐயந்தீர உரை எழுதுவோருக்குப் பரிசு தருவதாக முன்வந்து ரூபாய் ஆயிரம் இதற்கென ஒதுக்கி வைத்தார். இருபத்தெட்டுக் கட்டுரைகள் வந்தன. ஒருவர் தத்துவ விளக்கம் தர முற்பட்டார். மற்றொருவர் தொல்காப்பியரே தவறியதாகக் கொண்டு இச்சூத்திரங்களைத் தள்ளிக் களையவேண்டும் என்றார். மூன்றாமவர் மூன்று உரையாசிரியர்களும் ஒருவருக்கொருவர் முரண்பட்டிருந்தாலும் மூவர் உரையும் புகழ்ந்து அவற்றின் அழகைப் பாராட்டுகிறார். எனவே முடிந்த முடிபாக அவர் ஒன்றும் கூறுவதற்கில்லை. 16 பேர்கள் இளம்பூரணரையே விளக்கினர். 9 பேர் பேராசிரியரைப் பின்பற்றினர். திரு குப்புசாமிராஜாவின் கருத்தையே திரு ந. கி. நாராயணராஜா அவர்கள் எழுதியுள்ளார். ஒருவர் 13681 தொடைகொள்வர். மற்றொருவர் ஏதோ புது விளக்கம் தர முற்பட்டுள்

ளார். திரு அடிகளாசிரியர் மூவரையும் ஆராய்ந்து பழைய மரபின்படியே தொகை கொண்டு புதுவகை விளக்கம் தந்துள்ளார். ஐயத்தினை முழுதும் நீக்கித் தெளிவுபடுத்தும் உரை ஒன்று பரிசுபெறுமளவில் வந்துள்ளதாகக் கூறுவதற்கில்லை.

பரிசு அளிக்க விரும்புபவர் எப்படியேனும் பரிசினை வழங்கவேண்டும் என்று விரும்புகிறார். திரு அடிகளாசிரியர் உரையே வந்தவற்றுள் சிறந்தது, அவருக்கு ரூபாய் ஐந்நூறு தரலாம். திரு மு. ராமலிங்கனார், திரு S. நடராசன், திரு புலவர் குழந்தை, திரு மரிய அந்தோணி, திரு பாவாணன் என்ற ஐவரும் முயன்று எழுதியுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் நூறு தரலாம்.

திரு குப்புசாமிராஜா அவர்களே இச்சூத்திரங்களுக்கு உரைஎழுதி வெளியிட்டுள்ளார். பாடத்தைத் திருத்திப் பொருள் காண்கிறார். பாடத்தைத் திருத்துவதற்கும் காரணம் காட்டுகிறார். இந்த உரையையும் அறிஞர்கள் ஆராயவேண்டும்.

இத்தகைய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதால் தான் இந்த ஆராய்ச்சிக்கென ஆயிரம் ரூபாய் பரிசு தர முன்வந்தார். அவருடைய நல்லெண்ணம் மேலும் மேலும் ஓங்கித் தமிழை வாழ்விப்பதாக.

மதுரை
8-2-68 தெ. பொ. மீனாட்சிசுந்தரன்

"உலகின் பசிப்பிணி போக்குவதே
உயர்ந்த நல்லற மாகும்"

மணி மேகலை மன்றம்

இராஜபாளையம்.

தலைவர்
பன்மொழிப்புலவர்
மு. கு. ஜகந்நாதராஜா

துணைத்தலைவர்
வித்வான் ந. கி. நாராயணராஜா

செயலர்.
கொ. மா. கோதண்டம்

துணைச்செயலர்.
பூ. அ. துரைராஜா

கிளைகள்
திருக்குறள் சிறுர் பயிற்சிக்கழகம்
தெலுங்கு வித்யாலயம்

பதிப்புரை

ஒருசமுதாயம் நாகரிகமுடனும் பண்பாட்டுடனும் சிறந்து விளங்கி, அன்பும் அமைதியும் அறமும் உடைய வாழ்வில் இன்புற்று மிளிரத் துணையாவது இலக்கியமும் தத்துவமுமேயாகும். வானளாவும் கட்டிடங்களோ, வானத்தை வெல்லும் விண்வெளிக் கலங்களோ இருப்பது கொண்டு ஒரு சமுதாயம் பெருமிதமடையாது. சமத்துவமும், சுதந்திரமும் சகோதரத்துவமும்உடைய, பசிப்பிணி நீங்கி வளமுடன் உலக சமாதானத்தைப் போற்றி பண்பாடுடன் வாழும் நாடே சிறப்புக்குரிய நாடாகும். பழம்பெரும் பண்பாடுடைய நமது பாரதநாடு இத்தகு சிறப்புடன் திகழ்ந்து, விஞ்ஞானத்திலும் ஆன்மீகத்திலும் சிறந்து விளங்கி உலகிற்கு வழிகாட்டுமென நம்புவோமாக,

அதற்கு ஆங்காங்கேயுள்ள பெருமக்கள்தன்னல வெறியும், பணப்பேராசையும் சிறிதே ஒதுக்கி, பொதுநல உணர்வுடன் நமது தொன்மையான பண்பாட்டுக்கு ஊறு நேராவண்ணமும், தற்கால உலகப் போக்கினை உணர்ந்தும், நம் இலக்கியமும் தத்துவமும் மக்களிடையே பரவப் பாடுபட வேண்டும், சிறந்த மன்றங்கள் மூலமே இப்பணி நடைபெறமுடியும். அத்தகைய மன்றங்களில் ஒன்ருகத்திகழ இராஜபாளையம் மணிமேகலை மன்றமும் முயல்கின்றது.

மணிமேகலை மன்றத்தின் சார்பில் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும் ஏதாவதொரு தொண்டு செய்ய வேண்டும் என விரும்பினோம். அதன் விளைவாக, எமது நகர்ப் பழம்பெரும் தியாகிகளில் ஒருவரும், கல்வியும் செல்வமும் கலந்துறையும் தமிழறிஞரும், ஆராய்ச்சியாளரும், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோருமாகிய உயர்திரு பூ. கு. குப்புசாமிராஜா அவர்களை அணுகினோம். அவர்கள் சுயமாகத் தமிழ் கற்றுத்தேர்ந்தவர். சோதிடக்கலையிலும் பல ஆராய்ச்சிகள் செய்துள்ளார். கம்பனின் அமுதில் திளைத்தவர். வள்ளுவனின் உள்ளத்தை உணர்ந்தவர். இலக்கணப்புலமை மிக்க ஆய்வாளர். தமிழுக்கென வழங்கும் வள்ளல். வளைந்துகொடுக்காமல் அஞ்சாது தனது கருத்தை நேரிதின் வலியுறுத்தும் இயல்பினர். தருக்கநெறி கற்ற தமிழன்பர். இத்தகு பெரியாரை அணுகின் பயன்பெறுமற்போவோமா? நற்பயனே விளைந்தது.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் பாண்டிய மன்னன் தன் கருத்துக்கேற்ற பாடல் இயற்றும் புலவருக்கு பொற்கிழி அளிக்க முன்வந்தது போல ''தொல்காப்பியச் செய்யுளியலிலுள்ள இருசூத்திரங்கட்கு சிறந்த விளக்கவுரை தருபவருக்கு ஆயிரம் ரூபாய் பரிசு'' தருவதாக அறிவித்தார்கள்.

விளக்கக் கட்டுரைகளைப் பரிசீலிக்க வேண்டுமென, மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பன்மொழிப் புலவர், உயர்திரு தெ. பொ. மீனாட்சி

சுந்தரனுர் அவர்களை வேண்டினேம். தமிழ்த் தொண்டுள்ளமும் பரந்தமனப் பான்மையும் கொண்ட துணைவேந்தர் அவர்கள் பரிசீலிக்க ஒப்புக் கொண்டார்கள். இஃது எமது பெரும் பேறெனக் கருதுகின்றேம்.

தொல்காப்பியச் சூத்திரவிளக்கப் பரிசுச் செய்தியை துண்டுப் பிரசுரமாக அச்சிட்டு, தமிழறிஞர்கட்கு அஞ்சல் மூலம் அனுப்பிவைத்தோம். தமிழகப் புலவர் குழு உறுப்பினர் கட்கு அனுப்பிவைத்தோம். பல்வேறு மன்றங்கட்கு அனுப்பிவைத்தோம் 10-8-67உ தினமலர் நாளிதழிலும், 23-8:67உ தினமணி நாளிதழிலும் அத்துண்டுப் பிரசுரத்தையே விளம்பரப் படுத்தினேம். அதைக் கண்ணுற்ற தமிழறிஞர்கள் எமது முயற்சியையும் திரு பூ. கு. குப்புசாமிராஜா அவர்களின் தொண்டுள்ளத்தையும் பாராட்டி பல கடிதங்கள் வரைந்தனர்.

''மொழிக்கும் மொழிக் குரியவர்களுக்கும் இது வரை எவரும் (பாண்டித்துரை தேவர் தவிர) எடுக்காத புது முயற்சியிலீடுபட்டிருக்கும் தங்கள் ஆர்வங்கண்டு மகிழ்கின்றேன்''

—P. தளவாய். திருநெல்வேலி

''பழந்தமிழ்த்தொல் காப்பிய சூத்திரவிளக்கக்
கட்டுரைக்குப் பரிசு சங்கக்
கிழியெடுத்த பாண்டியனே நிகரரூபாய்
ஆயிரமும் கிருபை யால் நம்
மொழியின்க ணிலக்கணந்தேர் பயிற்சியோங்க
வழங்கு வள்ளல்——

க. ரா. இராதாகிருஷ்ணன்
நாகப்பூர்.

இதுபோன்றே தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் இம் முயற்சியைப் பாராட்டினர். எல்லாவற்றிற்கும் மேலாக தமிழகப் புலவர்குழு கோவில்பட்டியில் கூடிய 22வது கூட்டத்தில் 14,15-10-67உ கூடிகீழ்க்கண்டபாராட்டுத்தீர்மானம் நிறைவேற்றியது.

முடிவு 6: ''இராசபாளையம் திரு பூ. கு. குப்புசாமிராஜா அவர்கள் தமிழ்மொழியின் ஆக்கத்தின் பொருட்டு அண்மையில் தொல்காப்பியச் சூத்திர விளக்கப்பரிசு வழங்க முன் வந்திருப்பது குறித்து இக்குழு அவர்களைப் பாராட்டுவதுடன் தன் உளங்கனிந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றது.''

தமிழ்மொழிக்கு அரணுகத்திகழும், தமிழின் முதற்பெரு நூலாகிய தொல்காப்பியம், தமிழறிஞர்களின் சிந்தனைக்கு விருந்தாயிற்று. தொல்காப்பியச் செய்யுளியல் வித்துவான்கட்குப் பாடப்பகுதியிலிருந்து நீக்கப் பட்டிருந்ததால் கண்ணுறுத பலரும் அதைத் திரும்பப்படித்து ஆய்வுகள் நடத்தினார்கள்.

தொல்காப்பியச் செய்யுளியலை மீண்டும் ஆராய வாய்ப்பளித்தமைக்குப் பலர் பாராட்டுத் தெரிவித்தனர். மொத்தத்தில் தமிழக முழுதுமுள்ள தமிழறிஞர்களை இப்பரிசுத்திட்டம் கவர்ந்தது. இப்பரிசுத்திட்டத்தில் மொத்தம் இருபத்தெட்டு தமிழறிஞர்கள் கலந்து கொண்டார்கள். எமது நகரைச்சார்ந்தவர்கள் இருவர். பெண்மணிகள் மூவர். நாங்கள் அறிவித்த முடிவு தேதி 30-9-67. அதை நீட்டிக்குமாறு சில அன்பர்கள் கோரினார்கள். அவர்களது ஆர்வத்துக்கு நன்றி பாராட்டினும் முடிவு தேதி மாற்ற இயலவில்லை. முடிவுதேதிக்குள் எல்லாக்கட்டுரைகளும் வந்து சேர்ந்தன. அவற்றைப் பரிசீலிக்க திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரிடம் அளித்தோம். துணைவேந்தரின் பல்வேறு அலுவல்களுக்கிடையே, கல்வித்துறையில் ஏற்பட்ட சோதனை மிக்க கால கட்டத்திற்கிடையே, மிகப் பொறுமையுடன், தமிழின் பால் மட்டற்ற காதல் கொண்டு, இக்கட்டுரைகளைப் பரிசீலித்தார்கள். அவரது முடிவை 8-2-68உ தெரிவித்தார்கள் அவர்கட்கு எமது மன்றமும் தமிழுலகமும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளது. அவரது முடிவு, பரிசு வழங்குபவருக்கும், எமது மன்றத்தாருக்கும் திருப்தியை அளித்தது.

வந்த கட்டுரைகளில் ஒன்றும் பரிசு பெறத் தகுதியின்மையால் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப் பட்டது. நன்கு, தீர்க்கமாக ஆலோசித்தபின்னரே இம் முடிவு செய்தார்கள்.

இந்நிலையில் திரு பூ. கு. குப்புசாமிராஜா அவர்கள் தாம் முன்பே ஆராய்ந்த போட்டிக்குரிய தொல் காப்பிய செய்யுளியல் இருசூத்திரங்கட்கும் உரிய விளக்கவுரையை நூல்வடிவில் வெளியிட விரும் பினேம். அவர்களும் இசைந்தார்கள். அவரது ஆராய்ச்சிக்கட்டுரையைசென்னையில்மிகச்சிறப்புடன் நடந்த இரண்டாவது உலகத்தமிழ் மகாநாட்டுக் கருத்தரங்கு வெளிநாட்டுப்பிரதிநிதிகளுக்கு மட்டும் 4-1-68ல் இலவசமாக வழங்கினேம்.

திரு பூ. கு. குப்புசாமிராஜா அவர்கள் போட்டிக் குரியஇருசூத்திரங்கள்பற்றியும், அதன்தொடர்பைப் பற்றியும், சுயமான பாடபேதத்துடன்ஆய்ந்துகண்ட விளக்கஉரையை வெளியிடுவது பாராட்டக்குரிய தாகும். புகையுண்ட ஓவியமொன்றை மாசு துடைத்து, புதுவண்ணம்தீட்டி, சட்டமிட்டு, கண்ணுடி போட்டு, எழில்பெற எல்லாருடைய கவனத்தை ஈர்க்கும் வகையில் வீட்டு முன்வாயிலில் வைத்தாற் போன்றே, தொல்காப்பியர் வரைந்த சூத்திர உருவிலுள்ள சொற்சித்திரங்களை எடுத்து, எல்லாருடைய கவனத்தையும் ஈர்க்கச்செய்து, ஆயிரம் ரூபாய் பரிசு அளித்து, நூலாகவும் வெளி யிட்டு, விழாவைத்து வெளிப்படுத்தி, தமிழுக்கு நற்றெண்டாற்றியுள்ளார்கள். இரண்டாயிரம் ரூபாய் வரை இருசூத்திரங்கட்கு செலவிட்டு, தமிழறிஞர்களின்இதயபீடத்தில் தொல்காப்பியரை ஏற்றிவைத்த அன்னுரை எத்துணை பாராட்டினும் தகுமன்றே?

மாசுபடிந்த மணிக்கு பட்டைதீட்டி தமிழ்த் தாயின் மகுடத்தில் பதித்தாற்போல, ஒருசில பேரறிஞர்களைத்தவிர மற்றவர்கள் கூர்ந்து நோக்காத இச்சூத்திரங்களை அனைவருடைய கவனத்திற்கும் ஆராய்ச்சிக்குமுரிய பொருளாகவும் செய்த அவர்களைப் பாராட்டுவதைவிட, அந்த சூத்திரங்கட்கு அவர் தரும் விளக்கத்தை புலவர்குழுவும், கருத்தரங்குகளும் ஆராய்ந்து பார்த்து தெளிதல் சிறந்த நன்றியாக அமையும் எனக் கருதுகிறோம்.

போட்டிக்குவந்தஎல்லாக் கட்டுரைகளும் தொல்காப்பிய மூலசூத்திரங்கட்கு தரம் சுயமாக ஆய்ந்த விளக்கவுரைகளாக இல்லாமல், இளம் பூரணர், பேராசிரியர்களின் உரைகளை விளக்குவதாக அமைந்திருந்தன: உரையாசிரியர்களின் உரையைத் தழுவினும் சுயமான தெளிவான உரையையே எதிர் பார்த்தோம். ஆனால் உரைகளையே சுருக்கியும், விளக்கியும், வாய்பாடுகள் கொண்டு விளக்கியும் தான் கட்டுரைகள் வந்தன.

'சுயமான பாடபேதங் கொண்டு விளக்கலாம்' எனக் குறிப்பிட்டிருந்தோம். தொன்மையான நூல்களில் ஏடெழுதுவோரால் பாடங்கள் திரிக்கப்படுதல் யாவரும் அறிந்த தொன்றே. மேலும் இச்சூத்திரங்க்ள் ஏற்கனவே பாடபேதங்களை உடையதாதலினாலும், தெளிவான உரை வேண்டுமென்ற காரணத்தாலும்தான், சுயமாகக்கற்பித்து பாடபேதங்கொள்ளலாம்,என்றஉரிமையைஅளித்தோம்.

ஆனால் மரபுவழிக்கு மாறுபட அஞ்சிப்போலும் ஒருவரைத்தவிர எல்லோரும் பழம்பாடமே கொண்டனர்.

“தொண்டு தலையிட்ட பத்துக் குறை எழுநூற் றொன்பஃ தென்ப’’ என்று ‘தொண்டு’ என்ற சொற்பிரயோகத்தையும், அரிதும் பெரிதுமாக ஏன் சூத்திரம் செய்தார் என்பதையும் பற்றி சுயமான புது விளக்கம் யாரும் தரவில்லை. எளிய முறையில் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் கட்டுரைக்குரிய நடை, முன்னுரையாசிரியர்களைக் குறித்த ஆராய்ச்சி, தமது சுயமான புதிய விளக்கம், 17 நிலம் 70 வகை பற்றிய கருத்து, ‘‘தொண்டு தலையிட்ட’’ என்பதன் ஆய்வுரையில் புதிய விளக்கம் இவைகளைக் கொண்டு கட்டுரைகளை ஆய்ந்து பார்த்ததில், எல்லாவற்றிலும் நிறைவான ஆய்வுடைய கட்டுரை ஒன்றுமில்லை என்பது தெளி வாயிற்று

‘‘பத்துப் பக்கத்துக்குட்பட்டிருத்தல்வேண்டும்’’ என்று விதிகூருமல் ‘நலம்’ என்று கூறிய எமது பெருந்தன்மையை நன்கு பயன் படுத்திக் கொண்டு 30, 40 பக்கங்கட்கும் கட்டுரைகள் வந்தன. வாய் பாடுகளை விளக்கஅதிகப்பக்கங்களைச்செலவிட்டனர். அவர்களது பாராட்டத்தக்க உழைப்பிற்கு தமிழ்த் தாய் உறுதியாகப் பயன்தருவாள் என நம்புகிறோம்.

தொல்காப்பியச் சூத்திரங்கட்குப் போட்டி நடத்தியதினுல் தமிழறிஞர்களிடையே ஆய்வுத் துறையில் புது முயற்சி கொள்ளும்படி சிந்தனைச் சுடரைத் தூண்டிய பெருமை எமது மன்றத்துக்கு அமைந்தால் அதுவே போதும். இருசூத்திரவிளக்க ஆராய்ச்சி முன்னைவிட அதிகமாகச் சிரத்தையுடன் செய்யவேண்டிய பொறுப்பை நாம் நன்குணர வேண்டும். போட்டி நடத்தியதால் சில புதிய கருத்துக்களும் விளக்கங்களும் கிடைத்துள்ளன. போட்டியிற் கலந்து கொண்ட எல்லாருமே நற்புலமையாளர்கள். தமிழ்த்தொண்டில் ஆர்வமுள்ளவர்கள். ஆதலின் அயராது உழைத்து மீண்டும் புதிய முறையில் தமது ஆராய்ச்சியைத் தொடங்கவேண்டும். கருத்துக்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டு ஒத்துழைத்தால் இருசூத்திரங்கட்கும், தொல்காப்பியரின் உட்கிடையானஉண்மைக் கருத்தைக் கண்டுபிடிக்கலாம் என நம்புகிறேம். அதற்கு இந்நூல் பயன் படும் எனக் கருதுகிறேம்.

தமிழ்ப்பற்றும் தொண்டுளமும் கொண்ட நல்லறிஞர்கள் ஒருங்கே கூடி இதுபோன்ற ஆய்வுக் கருத்துக்களை விவாதித்து ஒருமுடிவுகாண முயல வேண்டும். தமிழ் மன்றங்களும், அரசாங்கமும், தமிழறிஞர்களும் ஒருங்கிணைந்து இதற்கென ஒரு நிறுவனம் அமைத்து, தொன்னூல்களிலுள்ள ஆய்வுகளை நூல்வடிவில் வெளியிடவேண்டும். இத்தகைய நிறுவனம் விரைவில் அமைவதாக.

தமிழறிஞர்கட்குச் சிந்தனை விருந்தளித்து, ஆய்வுத்துறையில் ஊக்கமூட்டிய தமிழறிஞரும், வள்ளற் பெருந்தகையாளருமான உயர்திரு பூ. கு. குப்புசாமிராஜா அவர்கட்கு தமிழுலகமும், எமது மன்றமும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. கட்டுரைகளைப் பரிசீலித்து எமது மன்றத்தை கௌரவித்து, தமிழ்த் தொண்டாற்றிய பன்மொழிப் புலவர், மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்- திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கட்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். எமது பரிசுத்திட்டத்தில் தமிழார்வம் காரணமாகக் கலந்துகொண்டு சிறப்பித்த பேராசிரியர்கட்கும் புலவர் பெருமக்கட்கும் எமது நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறோம்.

எமது மன்றத்தின் சார்பாக தமிழார்வம் உந்த அயராதுழைத்த மன்றச் செயலர் திரு கொ. மா. கோதண்டம் அவர்கட்கும், துணைச் செயலர் திரு பூ. அ. துரைராஜாஅவர்கட்கும் நன்றி உரித்தாகுக.

இந்நூலை அழகுற அச்சிட்டுத்தந்த நந்தினி அச்சகத்தாருக்கும் எமது நன்றி.

மு. கு. ஜகந்நாதராஜா
தலைவர்
மணிமேகலை மன்றம்
இராஜபாளையம்.

15-2-68

முன்னுரை

அமுதினும் இனிய தீந்தமிழ் மொழியின் நல்லிலக்கியங்களைக் கற்பவருக்கு உறுதுணையாவது தொல்காப்பியம். அதிலுள்ள ''ஐவகையடியும்'' ''மெய்பெறுமரபின்'' எனத்தொடங்கும் இருசூத்திரங்களுக்கும் உரைகள் தெளிவின்றியும் முரண்பட்டு முள்ளன. இச்சூத்திரங்களைப்பற்றி பெரும் புலமை வாய்ந்த புலவர்களையும் கவிராயர்களையும் உசாவினேன். தெளிவுற யாரும் விளக்கவில்லை. நாற்பதாண்டு காலமாக இதைப்பற்றிச் சிந்தித்து வந்தேன். 'தொண்டு' என்ற சொற்பிரயோகத்தைப் பற்றி ஆய்ந்தேன். அதிலிருந்து ஒருவகையாக தெளிவுதரும் எளிய விளக்கத்தைப் பெற்றேன்.

இந்நிலையில் தமிழன்பரும் மணிமேகலை மன்றத் தலைவருமான திரு மு. கு. ஜகந்நாதராஜா அவர்கள் என் கருத்துக்களை நூல்வடிவிற்காண விரும்பி அடிக்கடி தூண்டிவந்தார்கள். அவர்களுடைய விருப்பத்திற்கிணங்க முதலில் 'தொல்காப்பியச் சூத்திர விளக்கத்தை' நூலாக வெளியிடலாம் என முடிவுசெய்தேன்.

நான் சுயமாகத் தமிழிலக்கியங்களைக் கற்றவன். ஆதலின் தமிழறிஞர்கள் இச்சூத்திரங்களுக்கு தெளிவுரை கண்டிருக்கலாம் என நினைத்து இவ்விரு சூத்திரங்களுக்கும் புதியவிளக்கஉரைஎழுதுபவருக்கு ஆயிரம் ரூபாய் பரிசு தருவதாகச் சொன்னேன்.

மணிமேகலை மன்றத்தார் பரிசுதிட்டத்தைவிளம் பரப்படுத்தி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். 28 கட்டுரைகள் வந்தன. மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பன்மொழிப்புலவர் திரு தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் அவர்கள்கட்டுரைகளைப்பரிசீலனை செய்தார்கள்.

கட்டுரைகளில் புதிய விளக்கமொன்றுமில்லை. அவற்றில் பழைய உரையாசிரியர்கள் கூறியதன்றி புதுஉரைவிளக்கவில்லை. எனினும்பரிசுத்தொகையை நிறுத்துவதற்கில்லையாதலின் பரிசுத்தொகையை கலந்துகொண்ட கட்டுரையாளர்கள் எல்லோருக்குமே பகிர்ந்தளிக்க விரும்பினேன். எனினும்மன்றத்தார் கட்டுரைகட்கேற்ப பரிசுத்தொகையை பகிர்ந்தளித்துள்ளார்கள்.

வேறு புதிய தெளிவான விளக்கம் வராததால் என் விளக்கஉரையை வெளியிட இசைந்து இன்னூல் மணிமேகலை மன்றத்தாரால் வெளியிடப்படுகிறது. இவ்வுரையைத் தமிழறிஞர்கள் ஏற்பரென்று நம்புகிறேன். மறுப்புக்களிருப்பினும், ஐயங்களை எடுத்துக் காட்டினும் நன்றியுடையவனுக இருப்பேன். இந்நூலின் இரண்டாம் பதிப்பில் அவை இடம்பெறும்.

பாடபேதங்கொண்டிருப்பது பற்றிச் சிலர் ஏற்க முன்வராதிருக்கலாம். காலந்தோறும் கருத்துகள் மாறுவது உலகவியற்கை. ஒருகாலத்தில் புறக்

கணிக்கப்பட்ட கருத்துக்கள் பிற்காலத்தாரால் ஏற்றுக்கொள்வதைக் காண்கிறோம். ஒருகாலத்தில் பூமியைச் சூரியன் சுற்றுவதாகக்கருதினர். இன்று சூரியனைத்தான் பூமி சுற்றுகிறது என்ற கருத்தை ஏற்கின்றோம். அதுபோன்றே இந்நூலின் கருத்தும் வருங்காலத்தில் ஏற்கப்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

கட்டுரைகளைப் பரிசீலித்த பன்மொழிப் புலவர் திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களது முடிவுரையிற் கண்ட பரிசுபெற்ற தமிழறிஞர்கட்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெண்கள் தமிழ்ப் புலமையிற் சிறந்து விளங்குவதை ஊக்குவிக்கும் பொருட்டு மேலும் ஆறுதல் பரிசாக பாலையம்பட்டி ,திருமதி R. மாஸ்கரேனஸ் B. A. அவர்கட்கும், எம் நகர்ப் புலமையாளரை ஊக்குவிக்கும் பொருட்டு திரு வித்வான் ந. கி. நாராயணராஜா அவர்கட்கும் நூறு ரூபாய் வீதம் பரிசளிக்கின்றேன்.

இந்நூலைவெளியிட்டு, பரிசுத்திட்டத்தை நடத்தி சிறப்பானமுறையில் பரிசளிப்புவிழாவும் நூல் வெளியீட்டு விழாவும் நடத்தும் மணிமேகலை மன்றத்தினருக்கும், பரிசுத் திட்டத்திற் கலந்து கொண்ட பேராசிரியர்கட்கும், பன்மொழிப்புலவர் திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கட்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பூ. கு. குப்புசாமிராஜா

1-3-68

தொல்காப்பியச் செய்யுளியல்

இருசூத்திர விளக்கம்

விளக்கியவர்

பூ. கு. குப்புசாமிராஜா

இராஜபாளையம்.

தொல்காப்பியச் செய்யுளியல் இருசூத்திர விளக்கம்

உலகிலேயே மிகப்பழமையான இலக்கியங்கள் உடைய மொழி தமிழ் மொழியாகும். உயர்தனிச் செம்மொழி என உயர்ந்தோரால் பாராட்டப் பெறும் தனிச்சிறப்புடைய மொழி தமிழாகும். மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே மிகச்சிறப் புடனும் எழிலுடனும் விளங்கிய இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டிருந்தும் இன்றும் இளமை குன்றாது கன்னித்தமிழ்த் தாயாகக் காட்சியளிக்கும் பெருமை உடைய மொழியாகும். தென்றமிழ் என்றும் தீந்தமிழ் என்றும் ஒண்டமிழ் என்றும் உயர்தமிழ் என்றும் செந்தமிழ் என்றும் செழுந் தமிழ் என்றும் தூய்தமிழ் என்றும் தொல்தமிழ் என்றும் பலபடியாக அறிஞரால் பாராட்டப்பெறும் மொழி தமிழேயாகும், உலகத்து அறிஞர்களின் கவனத்தை ஈர்த்து தனது ஒப்புயர்வற்ற இலக்கிய இலக்கணப் புலமையால் சிறந்து விளங்கும் சீரிய தமிழின் பெருமையை யாரே எடுத்தியம்புவார்?

இயற்றமிழ், இசைத்தமிழ், மறைத்தமிழ் எனும் முத்தமிழும் முழங்கும் மூவாதமொழிஎன்று சிறப்பிக்கும் தமிழ்மொழியின் இயல்பை விளக்கியும், இலக்கியங்களை உணரும் வாயிலாக விளங்கியும்,

தமிழ் நாட்டின் வளமும், தமிழர்களின் நாகரிகமும், வெளிப்படுத்தும் பெருநூலாகத் திகழ்ந்தும் சிறப் புறுவது தொல்காப்பியமே என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

நமக்குக் கிடைத்த முதல் தமிழ் நூல் தொல் காப்பியமேயாகும், மிகப்பழமையான இந்நூல் கால வெள்ளத்தையும் கடல் கோள்களையும் கடந்து நமது கைக்கெட்டியது தமிழர்கள் செய்த தவப்பயனே யாகும். இத்தகு சிறப்புடைய தொல்காப்பியம் எழுத்து- சொல்- பொருள் எனும் முப்பாலுடன் திகழ்கின்றது. வேறெந்த மொழியிலும் இல்லாத பொருள் இலக்கணத்தின் சிறப்புகளை இந்நூல் ஒன்று தான் தெளிவாகவும் முழுமையாகவும் விளக்கு கின்றது. தொல்காப்பியம் இலக்கணநூல் மட்டு மன்று. கலைகளின் விளக்கமாகத்திகழும் தமிழ்க் கருவூலமாகும். தன்னிகரில்லாத் தமிழ்க் கடலாகும். இத்தகைய சிறப்புமிக்க தொல்காப்பியத்தின் வாயி லாகவே சங்கஇலக்கிய அமுதத்தை அனுபவிக்க முடிகிறது.

இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், கல்லாடர், சேனாவரையர். தெய்வச்சிலையார், சிவ ஞானமுனிவர் முதலிய உரையாசிரியர்களின் நுண் மாண் நுழைபுலத்தின் பயனாக தொல்காப்பியச் செய்திகளை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளினும் கூட இன்னும் தெளிவாகாத சில பகுதிகளும் உண்டு. அவற்றில் ஒன்று செய்யுளியலிலுள்ள இரண்டு சூத்திரங்களாகும். அதை விளக்குவதே இக்கட்டு ரையின் நோக்கமாகும்.

ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியனுர் தவ முனிவர் ஆவார். சமண சமயத்தைத் தழுவியவர் என்றும் பண்டைச் சேர நாட்டில் வாழ்ந்தவர் என்றும் தெரிகிறது. அவர்காலத்தில் பிறமொழிகளில் இலக்கணம் எழுதப்படவில்லை யாதலால் அவர் தமிழ் மொழியை நன்காய்ந்தும், தமிழ்த் தொன்நூல்களைக்கற்றும் பெற்ற புலமையால் சுயமாக இலக்கண நூல் யாத்தார். அகத்தியர், பனம்பாரனுர் பற்றிய கதைகள் ஆதாரமற்ற கற்பனைகளே. பனம்பாரனுர் ஒருசாலை மாணுக்கர் என்பதும், பாயிரம் பாடியது அவரே என்பதும் ஆதாரமற்றவையாகும். பாயிரம் பிற்காலத்தவர் இடைச்செருகலே ஆகலாம். தொல்காப்பியர் காலம் அறுதியிட்டுக்கூற இயலாதெனினும்கூட மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவராகக்கூட இருக்கலாம்.

தொல்காப்பிய நூற்பாக்கள் எளிமையுடையன சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் இனிய நடையுடைய சூத்திரங்கள் அவை. சிலவற்றைத்தொகுத்து சூத்திரம் செய்வார். அவற்றை வகுத்துக் காட்டும் சூத்திரங்கள் நிரல்பட அமைந்திருக்கும். உரையாசிரியர்கள் இச்சூத்திரங்களுக்கு உறையே போட்டிருந்தாலும்கூட மூலத்தை மட்டும் கற்றுச் சென்ருலும் தமிழறிஞர்கட்கு இடர்ப்பாடின்றி பொருள் விளங்கும். இத்தகைய எளிய இனிய நடையுடைய தெளிவானதொல்காப்பியத்தில் செய்யுளியலிலுள்ள இரண்டு சூத்திரங்கள் தொல்காப்பிய நெறிக்கு

முரணுக அரிதும் பெரிதுமாக மயக்கம் தருவதாக உள்ளன. இவ்விருசூத்திரங்களும் ஒன்றற்கொன்று தொடர்புடையனவாகும். இச்சூத்திரங்களுக்கு உரையாசிரியர் மூவரும் தட்டுத்தடுமாறி பாடுபட்டும் பயனின்றி பொருளுரை காணமுடியாது திகைத்துள்ளார்கள் என்று காண்கின்றோம் அவ்விரு சூத்திரங்கள் ஆவன:

ஐவகை யடியும் விரிக்குங் காலை
மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்த
எழுபது வகைமையின் வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே.

மெய்பெறு மரபிற் றொடை வகைதாமே
ஐயீராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்
றொன்ப: தென்ப உணர்ந்திசி னோரே.

இவ்விரு நூற்பாக்களுமேபாடபேதங்கள் கொண்டன இவ்விரு நூற்பாக்களும் நான்கடி உடையன. முதலிரு அடிகளும் மெய், ஐ, எனும் எதுகை ஒன்றி வருவன. இரண்டுமே அடிகளையும் அடிகளில் வரும் தொடைகளையும் ஒன்றோடொன்று கணக்கிடுங்காற் தொடர்புடையனவாகும். இரண்டுமேமயக்கத்தைத் தரும் வகையில் அமைந்த செய்யுளியற் சூத்திரங்களாகும்.

இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் மூவருமே தலைசிறந்த புலமையுடையவர்கள். வட நூற்கடலும் தென்நூற்கடலும் கரைகண்ட பெரும் புலமை சான்றவர்கள். அவர்களே இச்சூத்திரங் களுக்கு உரைகாணும் போது ஒருவரோடொருவர் முரணாகவும் தெளிவின்றியும் கூறுவர். பேராசிரியர் முதற்சூத்திர உரையில், தம் உரைகூறி பிறருரை மறுக்கும் போது

''அல்லாக்கால்..................... அது மயங்கக் கூற லென்னுங் குற்றமாமென மறுக்க''

''அது பொருந்தாது. என்னை?................. எடுத் தோதிய எழுத்து முதல் உறுப்பினான் வந்த அடிக் கண்ணே காட்டா தொழிதலின் அது நூன்மாறு கோளாம்''

''அஃதேல் அவை சிறப்புடையவற்றுக்குக் காரணங் கூறியவற்றாற் சான்றோர் செய்யுளிட் பயின்று வர வேண்டும் பிறவெனின் இந்நூல் செய்த காலத்துத் தலைச் சங்கத்தாரும் இடைச் சங்கத்தாரும் அவ்வாறு கட்டளையடியாற் பயின்றுவரச் செய்யுள் செய்தாரென்பதுஇச்சூத்திரங்களாற் பெறுது மென்பது............ இவை இக்காலத்துப் பயின்றில வென்று மற்றையவற்றோடு ஒக்குமெனப் படா வென்பது''

பேராசிரியர் இரண்டாம் சூத்திர உரையில்,

''எனவே, எழுநூற்றெருபத்தெட்டா மென்றஞ்சிப் பத்துக்குறை எழுநூற்றென்பது என்றானென்பது''

''இவ்வாறு அரிதும் பெரிதுமாகச் சூத்திரம் செய்த தென்னை யெனின் அங்ஙனமே அதனை ஞாபகப்படச் செய்தான் <u>ஆசிரியன் ஒரு</u> காரணம் நோக்கி என்னை?............

''அல்லாதார் முதனின்ற தொடையே கொண் டொழிக வென்ப. அது குற்றம். என்னை?

''அல்லதூஉம், ஒன்பஃ தென்ப உணர்ந்திசிஞேரே' என்பது பழம்பாடமாகலானும் அஃதமையா தென்பது. அவ்வாறு கொள்வார்க்கு தொடை பதின் மூவாயிரத்தறு நூற்றுத் தொண்ணூற் றுென்ப தாகலும் பிழைக்குமென மறுக்க''

எனவரும் பகுதிகளை நோக்க பேராசிரியரே முன்னு ரைகளை மறுத்து அவ்வுரைப்படி பொருள் கொண் டால் முதல் சூத்திரம் மயங்கக் கூறல்முதலிய குற்றம் தங்கும் என்றும், ஆசிரியன் ஒருகாரணம் நோக்கி, அஞ்சி, மயக்கும் வகையில் சூத்திரம் செய்தான் என்பதும் நன்கு புலனுகின்றது.

நச்சினர்க்கினியர் முதற் சூத்திரஉரையின் இறுதியில் ''அவை களைந்து தொடை கொள்ளுமாறு மெய் பெறுமரபின் என்னும் சூத்திரத்துட் காட்டுதும்'' என்று கூறுவதால் இரு சூத்திரங்களின் பிணைப்பை நன்குணரலாம். மேலும் கட்டளையடி கடைச் சங்கத்தில் பயிலாததை பேராசிரியர் உரைப்படியே எடுத்துக்காட்டுகிருர். இரண்டாம் சூத்திர உரையில் பேராசிரியரைப் போலவே

''இதனை ஆருயிரத்திருநூற்றுத் தொண்ணூற் றுென்று என்று விளங்கக் கூருது ஒருகாற் குறைத்து

அதன் மேலேற்றி ஞாபகப்படச் சூத்திரம் செய்தது ஒருபயன் நோக்கி............'' எனக் கூறுவதுடன் ''தொண்டுதலையிட்ட பத்துக்குறை'' என்பதை நான்கு விதமாக உரை பேதத்தால் நான்கு தொகைக்கணக்கையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

இவற்றிலிருந்து ஒருண்மை புலப்படுகிறது. இவ்விரு சூத்திரங்களும் உரையாசிரியர் காலத்திலேயே பாடபேதங்களையும், மயக்கவுரைகளையும் கொண்டிருந்தது என்பது தெளிவாகிறது. தற்கால உரைகளும் இச்சூத்திரங்கட்கு தெளிவு தருவதாயில்லை. மேலும் நமக்குக் கிடைத்த சங்க இலக்கியத்திலும் பயிலாத— முற்காலத்தில் இருந்ததாக உரையாசிரியர்களின் கற்பனையாகிய கட்டளை அடிகட்கே இச்சூத்திரம் பொருந்தும் என்பது சிலர் கருத்து. கட்டளை அடிமுறைக்கு தெளிவான சான்றுகளுமில்லை. இந்த சூத்திரங்களால்தான் ஊகிக்கப்படுகிறது. கட்டளை யடிமுறைக்கு இச்சூத்திரங்கள் தவிர வேறு ஆதாரமில்லை. இச்சூத்திரங்களோ தெளிவற்ற உரையுடன் இருப்பதால் மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய கதையாக கட்டளை அடி என்னும் கற்பனை அடிகள் பெறப்படுகின்றன. இக்கற்பனையிலிருந்து விடுபட்டு நேரடியாக தொல்காப்பியச் சூத்திரங்களுக்கு உரைகாண வேண்டும்.

உடலில் ஏற்படும் புண்ணுக்கு மருந்திட்டு தீர்த்துவிட முயல்வோம். மருந்துக்கும் நோய் போகாவிட்டால் அறுவைச் சிகிச்சை (ஆபரேஷன்)

யைத் தவிர வேறு வழியில்லை. உடனே அறுவை மருத்துவம் செய்வோம். அதுபோல தொல்காப்பியத்தின் இச்சூத்திரங்கட்கு நேரடிப் பொருளிலும் தெளிவில்லாவிட்டால் ஒரு சில பாட பேதங்களை அமைத்துக் கொள்வதில் தவறில்லை. ஏனெனில் ஏற்கன்வே இச்சூத்திரங்கள் பாடபேதம் உடையனவே. ஏடெழுதுவோரால் எத்தனையோ சொற்கள் திரிந்து பொருள் மயக்கம் வருவதாக அமைந்து விடுவதை தமிழறிஞர்கள் யாவரும் அறிவர்.

உதாரணமாக முத்தொள்ளாயிரத்துப் பாடல் ஒன்றின் ஓரடி
''கண்டன்ன கொண்டல்வரு காவிரி'' என்று ஏடெழுதுவோர்களால் திருத்திப் பதிப்பிக்கப் பட்டது. பின்னர் அறிஞர்கள் ஆய்வால் அந்த அடி ''கண்தன்மைகொண்டலரும் காவிரி'' என்று தெளிவாகியது. இதுபோல ஆயிரக்கணக்கான உதாரணங்கள் கூறமுடியும். ஆதலின் மிகப்பழமையான தொல்காப்பியச் சூத்திரங்களிலும் ஏடெழுதுவோரால் திரிக்கப்பட்ட சொற்பிரயோகங்கள் இருக்கலாம். உரையாசிரியர் காலத்திலேயே இந்த சொற்பிரயோகங்கள் வழக்காற்றில் வந்திருக்கலாம். ஆதலின் தொன்மையான பழந்தமிழ் நூல்களில் இடர்ப்பாடானமயக்கமுடையசொற்பிரயோகங்களை ஆய்ந்து தெளிவுதரும் வகையில் மாற்றி யமைப்பது அறிஞர் உலகம் ஏற்கும் ஒன்றேயாகும். இந்த வகையில்தான் தொல்காப்பியச் செய்யுளியலிலுள்ள இருசூத்திரங்களையும் ஆராய்ந்து பார்த்து

பாடபேதத்துடன் சூத்திரங்களை விளக்கியுள்ளேன். அதுவே மூலபாட மாகவும் இருந்திருக்கலாம். இனி சூத்திரங்களைக் காண்பாம்.

ஐவகை யடியும் விரிக்குங் காலை
மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்த
எழுபது வகைமையின் வழுவில வாகி
யறுநூற்றிருபத் தைந்தா கும்மே

என்பது தொல்காப்பிய செய்யுளியல் சூத்திரம். இது அடிகளின் வரையறை கூறுகின்றது. அளவடியுள் குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி கழிநெடிலடி என்னும் ஐந்தும் எழுத்தெண்ணும் முறைமை பற்றி பதினேழு நிலம் கொண்டு எழுபது வகைத் தளைவழுக்கலின்றி அறுநூற்றிருபத்தைந்து அடிகள் ஆகும் என்பது முன் உரையாசிரியர் கருத்து.

இங்கு பதினேழு நிலத்தைப் பற்றியும் எழுபது தளையைப் பற்றிய வழுவினையும் முன் எங்கும் கூறுமல் இங்கு புகுத்துவதேன் என்பது புலப்படவில்லை. 625 அடிக்கணக்குக்கும் இந்த நிலம், தளைவழுக்களுக்கும் நேரடி சம்பந்தம் இல்லை. 625 அடிக்கணக்கு ஐந்தடிகளையும் ஐந்து சீர்கள் உறழ்ந்தால் வரும் தொகை என இளம் பூரணரும். அகவல், வெண்பா, கலி எனும் மூன்று செய்யுள்கள் அளவடியானேவருதலின் அவற்றின் தொகையென்றுபேராசிரியரும் கூறுவர். 625 என்ற தொகை கொள்வதற்கு 17 நிலம் 70 தளைவழு சம்பந்தமில்லை என்பது உரையாசிரியர்கள் கருத்து. ஆனுல் சூத்திரத்தின் போக்கு 625 என்ற

அடித்தொகைக்கு அவை சம்பந்தப்பட்டால்தான் பொருத்தமாக இருக்கும். ஏனெனில் இங்கு கூற வந்தது அடிகளின் தொகையாதலின், அத்தொகை பெறும் வகையையும், எளிதின் விளக்கும் தொல்காப்பியர் கூறியிருக்கவேண்டும். ஆதலின் நிலம், தளைவழுத் தொகைகட்கு சம்பந்தங்கொண்டுதான் உரை வகுக்கவேண்டும். அதுவே பொருத்தமாக இருக்கும். மேலும் 70 வழுக்கள் என ஒன்று இருப்பதாக உரையாசிரியர்கள் கூறவில்லை. 7 தளைகளைத் தான் பத்து விதமாகக் கொண்டு 70 என உரை கூறிச் செல்கின்றனர். இன்ன பிற காரணங்களைக் கொண்டு இந்த சூத்திரம் கீழ்க்கண்டவாறு இருந்திருக்கும் எனத் தெரிகின்றது.

ஐவகை யடியும் விரிக்குங் காலை
மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்த
எழுவகைத் தளையின் வழுவில வாகி
அறுநூற் றிருபதிற்கையைந் த:கும்மே.

இதன்உரை:- ஐவகை அடி சீரடிப்பற்றிய குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்ற ஐந்து மாகும். நிலம் என்பது எழுத்தெண்ணும் முறையால் வருவதன்று. எழுத்தெண்ணல் வடமொழி மரபன்றி தமிழ்மரபன்று. நிலம் என்பது அசைகளையும் சீர்களையும் பிரித்துக்காணும் இடம் ஆகும். இரண்டு சீர்களின் இடைநிலத்தை தளை என்பது போல சீர்களுக்குள்ளே அசைகளின் இடைநிலத்தைப் பிரித்துணர்வதே நிலம் ஆகும். இம்

முறைப்படி எழுத்து - அசை - நிலம் - சீர் - தளை - அடி என்ற அமைப்பு செய்யுளில் அமைந்துள்ளதை அறிய முடிகிறது. சீர்கள் ஈ ர சை யு ம் மூவசையும் கொண்டுள்ளன. இருசீர்க்குக் குறைந்த அடியில்லை. ஈரசைச்சீர்க்கு அசை பிரிக்கும் நிலம் இரண்டாகும். சீர்களுக்கு இடையே நிற்கும் நிலம் ஒன்று. இவற்றைக் கணக்கிட்டால் பதினேழு நிலம் வருதலைக் காணலாம் ஈரசைச்சீர்கள் இரண்டான் முடியும் கு ற ள டி க் கு நிலம் மூன்று. இதுவே குறைந்த அ ள வா கு ம் . இதற்குக் குறைந்த நிலமில்லை. குறளடிக்கு மூவசைச் சீர்கள் இரண்டு வருங்காலத்தில் நிலம் ஐ ந் தா கு ம் கழிநெடிலடிக்கு மூவசைச்சீர் ஆறு வருவதே உயர்ந்த அளவாகும். அவ்விதம் வருங்காலத்து மூவசைச் சீர்கள் ஆறுக்கும் மூவசைச் சீர் நிலம் இரண்டாதலின் உறழ, $6 \times 2 \simeq 12$ நிலம் வரும். இனி சீர்களுக்கு இடைநின்ற நிலம் ஆறு சீர்க்கும் ஐந்து வருமாதலின் அத்துடன் சேர்க்க $12 \times 5 = 17$ நி ல ம் வ ரு கி ற து. இதுவே உயர்ந்தஅளவு. இதைவிட மி கு ந் த நி ல ம் இல்லை. இதைவிளக்கும் பட்டியல் காண்க. | என்ற கோடிட்டது நிலத்தைக் குறிக்கும்.

குறளடி — 3 நிலம் முதல் 5 நிலம்

தே| மா| தே| மா	(குறைந்த அளவு நிலம்)	3
தே| மா| தே| மாங் |காய்		4
தே| மாங்|காய் |புளி |மாங்|காய்		5
கரு| விளங்|கனி| கரு| விளங்|கனி		5

கழிநெடிலடிக்குஉயர்ந்தஅளவான கருவிளங்கனிச்சீர் ஆறுக்கும் நிலம் 17 வருதல் காண்க.

கரு| விளங்| கனி| கரு| விளங் |கனி. | கரு| விளங்| கனி| கரு| விளங்|கனி.| கரு| விளங் |கனி. | கரு| விளங்| கனி

ஓரடியில்வருவதுசீரும்நிலமும்தளேயுமாகும்ஆதலால் ஐவகைச் சீர்களேக் கூறி பதினேழு நிலங் கூறிய பின் தளேயைத் தான் கூற வேண்டும். ஆதலின் ஏழு தளேயைத் தான் கூறியுள்ளார். எழுபது எனப்பாடங் கொண்டோரும் ஏழுதளேகளேத் தான் குறிப்பிட்டுள் ளார்கள். ஏழுதளேயாவன.

நேரொன்று சிரியத்தளே
நிரை ஒன்று சிரியத்தளே
இயற்சீர் வெண்டளே
வெண்சீர் வெண்டளே
கலித்தளே
ஒன்றிய வஞ்சித்தளே
ஒன்று வஞ்சித்தளே

இனி ஐந்து வகைச் சீரடியுடன் பதினேழு நிலத்தையும் ஏழுதளேயையும்உறழ்ந்தால் 595 என்ற தொகை வரும். $5 \times 17 = 85 \times 7 = 595$ ஆதல் காண்க. இதுவே அடிவரையறையாகும். இந்த தொகையை ஆசிரியர் நேரிடையாக ''ஐந்து நூற்றுத் தொண்ணூற் றைந்தாம்'' என்று கூருமல், அறு நூற்றிருபதிற்கு (620—) ஐயைந்து $5 \times 5 = 25$) அஃ கும்மே- குறையும் (620— ல் 25 கழிக்க –595—)

ஐந்து நூற்று தொண்ணூற்றைந்தாகும் என வலிந்து கூறுவானேன் எனக்கேட்கலாம். இதற்கு காரணம் உண்டு: அடுத்து வரும் சூத்திரத்திலும் இவ்விதமே ''தொண்டு தலேயிட்டபத்து-குறை- எழு நூற்றென்பஃதென்ப'' என்று பாடங்கொண்ட உரையாசியர்கள்கூற்றால்தொல்காப்பியர்எண் தொகையைவலிந்து கூறுகின்றார் என்பது தெளிவாகும்: ஏனெனில் ''ஐந்து நூற்று'' என்று கூறிய பின் 100ன் மடங்கு முடிந்து பத்தின் மடங்கு கூற வேண்டி வரும். பிற மொழிகளில் அவ்விதமே அமைந்துள்ளது. ஆனல் தமிழில் மட்டும் ஒன்பது பத்துக்களை தொண்ணூறு என்று கூறுகிறோம். தெலுங்கு முதலிய மொழிகளில் ''தொம்பை'' என்றும் ''தொம்பத்து', என்றும் தான் உள்ளன. தமிழில் தொண்ணூறு என்று அடுத்தஸ்தானத்தின் பெயர் வருவதால் அது சிறப்பன்றெனக் கொண்ட தொல்காப்பியர் அம்முறைக்கு உடன்படாமல் இருக்கிறார். தொண்ணூறுக்கு வலிந்து இலக்கணச் சூத்திரம் செய்த தொல்காப்பியர் அதன் போலித் தன்மையையுணர்ந்து 'தொண்ணூறு' என்ற சொல்லேப் பிரயோகிக்க விரும்பவில்லே என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆதலால் தான் ''தொண்ணூறு'' என்பதற்குபதிலாக வேறுவிதமாக பத்தின் மடங்கு கூறி அந்த எண்ணேப்பெற வைக்கின்றார்.

ஆதலினுல் தான் இச்சூத்திரம் ''ஐந்து நூற்று தொண் ணூற்று ஐந்து'' என்ருல் ''நூறு'' என்ற எண் மடங்கு ஈரிடங்களில் வருதல் தவறு என்று உணர்ந்து இத்தொகையைப் பெற வலிந்து கூறி ''அறு நூற்று இரு பதுக்கு ஐந்தைந்து அஃகும்'' என்று கூறியுள்ளார். இருபதுக்கு - என்று வந்ததால் மீண்டும் 'இருபத்தைந்து' என்று கூறத் தயங்கி ஐந்து×ஐந்து— என்றுஒன்றன் மடங்கைக்கூறுகிருர். இச் சூத்திர பாட பேதத்தின்படி நூறு - பத்து - ஒன்றன் மடங்குகளை நிரல்பட வைத்துள்ளார் என்பது தெரிகின்றது. இப்படி எண்மடங்கு நிரல்பட அமைதல் வேண்டும் என்ற கருத்துடையவர் தொல்காப்பியர் என்பது அடுத்த சூத்திரமும் தெளிவாக்குகின்றது

கிராமத்துப் பெண் கணவன் பெயரைக் கூற அஞ்சி சுற்றிவளைத்து அப் பெயரைச் சொல்லுமாறு போன்றே 'தொண்ணூறு' என்ற சொல்லைக் கூற அஞ்சிய தொல்காப்பியர் சுற்றிவளைத்துக் கூறுகிருர் என்பதுணர்க. இது காறும் கூறியவாற்ருன் ஐந்து சீர்வகை அடிகள் பதினேழு நிலத்துடன் ஏழுதளை யுடனும் உறழ ($5\times17=85\times7\simeq595$) ஐந்து நூற்று தொண்ணூற்றைந்தடிகள் ஆகும் என்றும் இதுவே எளிதான தொகைக் கணக்கு என்றும் 625 என்பது தொகைக் கணக்குக்கு பொருந்தவில்லை என்றும் தெளிதல் வேண்டும். அடுத்த சூத்திரத்துடன் இவ்வடிக் கணக்கைப் பொருத்தும் போது இது தெளிவாக விளங்கும்.

அடித்தொகை 595 தான் என்பதை விளக்க மற்ருெரு சான்றுமுண்டு. யாப்பருங்கல விருத்தியில் 49 வது சூத்திரத்தின் உரையில்மேற்கோளாகக்காணப்படும் பழம்பாடலை ஆராய்ந்தால் இவ்வுண்மை விளங்கும்,

இருநூற் றிருமுப்பத் தொன்றகவற் கேனை
யிருநூற்ருெ டெண்ணன்கு வெள்ளைக்—
கொருநூற்று
முப்பத் திரண்டார் முரற்கைக் கிவையறுநூற்
றற்றமி லையைந் தடி

என்ற இச்செய்யுளினை ஆய்தல் வேண்டும்.

இருநூற்று+ இருமுப்பத்தொன்று— அகவற்காகும்
இருநூற்ருேடு+எண்ணன்கு —வெள்ளைக்காகும்
ஒருநூற்று+ முப்பத்திரண்டு — கலிக்காகும்

இதில், இருநூற்று+இருமுப்பத்திரண்டு $(2\times 31=62)$ $=262$
இருநூற்ருேடு+எண்ணன்கு $(8\times 4=32)$ $=232$
ஒருநூற்று+ முப்பத்திரண்டு $=132$

626

என்ற கணக்கில் 626 வருதல் பொருந்த வில்லை. இருநூற்று+ இருமுப்பது+ ஒன்று $(2\times 30=60+1)$ 261 என்று முதலடிக்கு பொருள் கொண்டனரா யிருத்தல் வேண்டும். எனினும் ஈற்றில் "இவை யறுநூற்று அற்றமில் ஐயைந்தடி" என்று கூறுவது பொருந்தவில்லை. அறுநூற்று—ஐயைந்து $(5\times 5=25)$ அடி, அற்றம்= முடிவில், இல்லை என்ற பொருள் தருகிறது. இதன்படி $(600-25=575)$ என்ற

தொகை எதற்கும் பொருந்த வில்லை. 'அற்றமில்' என்றின்றி 'அற்றமேல்' என்று இருந்தாலும் (600+25=625) எனலாம். இந்தப் பாடபேத மின்மையால் இச் செய்யுளின் ஈற்றடியை ''அற்ற மிலை யைந்தடி'' என்று பொருள் கொள்ளின் 'அறு நூற்றின் ஈற்றில் ஐந்தடி' இல்லை (600—5=595) என்ற தொகை வரும். இத்தொகை பெற முதலடி ''இருநூற் ருெடுமுப்பத் தொன்ருகும்'' என்ற பாடம் கொண்டால் (200+31=231) என்ற கணக்கு வரும். இப்புத்துரையின்படி செய்யுளை ஆயின் 595 என்ற அடிக்கணக்கு எளிதின் புலப்படும். மீண்டும் இச்செய்யுளை புத்துரையுடன் விளக்குவாம்.

இருநூற் ருெடு முப்பத் தொன்றகவற் கேனை
யிருநூற்ரு டெண்ணுன்கு வெள்ளைக்—
கொருநூற்று
முப்பத்திரண்டா முரற்கைக் கிவை யறுநூற்
றற்றமிலை ஐந் தடி.

இருநூற்ருெடு முப்பத்தொன்று	(200+31=231)
இருநூற்ருெடு எண்ணுன்கு	(200+32=232)
ஒருநூற்று முப்பத்திரண்டு	(100+32=132)
	595

இவை அறுநூற்று	= இவை ஆறுநூற்றில்
அற்ற மிலை	= முடிவில் இல்லை
ஐந்தடி	= ஐந்தடிகள்

(600ல் 5 அடிகழிக்க 595 அடிகள் ஆகும்)

தொல்காப்பிய சூத்திரத்தின் படியும் யாப்பருங்கல விருத்திஉரை மேற்கோட் ப ழ ம் பாடலானும் 595 அடிக்கணக்கே வரையறையுடைய தொகையாகும்.

தொல்காப்பியத்தில்நிலத்தை எழுத்தெண்ணும் முறை பற்றி வரும்

'நாற் சீர்கொண்ட தடியெனப் படுமே'
'நாலெழுத் தாதியாக வாறெழுத்
தேறிய நிலத்தே குறளடி என்ப''

என்று தொடங்கும் ஒன்பது சூத்திரங்களும் கூறுவது கட்டளேயடியன்றே? அதுபற்றி க ரு த் தெ ன் னை எனின் அச்சூத்திரங்கள் தொல்காப்பியர் சூத்திரங் களல்ல. இளம்பூரணருக்கு முன்பிருந்த உரையாசிரி யர்களால் இயற்றப்பட்ட உரைச் சூத்திரங்களிவை எனத்தெரிகிறது. செய்யுளியலின் முதற் சூத்திரத் தில் தொகையாகக் கூறிய முறைப்படி,

"மாத்திரை யெழுத்திய லசைவகை யெனுஅ
யாத்த சீரே யடியாப் பெனுஅ"

என்றபடி மாத்திரை, எழுத்து, அசைகளே விளக்கிப் பின் சீர்களே விளக்கும் சூ த் தி ர ங் க ளே நிரல்பட வைத்துள்ளார்.

"அந்நிலே மருங்கின் வஞ்சி யுரிச்சீர்
ஒன்றுத லுடைய வோரொரு வழியே''

என்று சீரைப்பற்றி கூ று கி ரு ர். அந்த ஒன்பது சூத்திரங்களேயும் கழித்தபின்

"சீர்நிலேதானே ஐந்தெழுத் திறவாது
நேர்நிலே வஞ்சிக் காறு மாகும்

எழுத்தள வெஞ்சினும் சீர்நிலைதானே
குன்றலு மிகுதலு மில்லென மொழிப"

என்ற சூந்திரங்களால் சீர்களைப்பற்றியே கூறுகிறார். அதன் பிறகுதான்

"வஞ்சி யடியே இருசீர்த்தாகும்"

என்று அடிகளை விவரிக்கிறார். ஆதலின்சீரைப்பற்றிக் கூறும் சூத்திரங்களுக் கிடையே அ டி யை ப் பற்றி நிரல்பட அமைக்கும் போக்குடைய தொல்காப் பியர் சூத்திரம் செய்திருக்க மாட்டார். ஆதலின் வடமொழி நெ றி ப ற் றி வந்த எழுத்தெண்ணும் மு றை யை தொல்காப்பியர் மேலேற்றவிரும்பிய பிற்காலத்தவர்களின் இடைச் செருகலே கட்டளை அடிஎன்னும் கற்பனை அடிகள் என்பது தெளிவாகும். அளவடிக்குள் குறளடி, சிந்தடி, நேரடி, நெடிலடி, கழிநெடிலடி என்று கூறுவது யாப்புக்கு பொருத்த மில்லை என்பது நன்கறிந்த தொன்றாதலின் அஃது தொல்காப்பியர் கருத்தன்று என்றும் ப தி னே ழு நிலம் என்பதும் எழுத்தளவு பற்றி வருவதன்று அசை, சீர்களின் இடை நிலமே என்றும் தெளிவாக உணரவேண்டும். இது கா று ம் கூறிய வாற்றால், கட்டளை அடிகள் என்பது உ ரை ய ாசி ரி ய ர் க ள் கற்பனையே என்பதும், சீரடிகளின் வரையறை 595 தா ன் எ ன் று ம் தெளிவாகும். தமிழறிஞர்கள் மேலும் நன்காய்ந்து பார்ப்பின் அம்முடிவன்றி வேறு பொருள் கூற இயலாதென்பதுணரலாம்.

மெய்பெறு மரபிற் றொடை வகை தாமே
ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற் றிருடு
தொண்டு தலையிட்ட பத்துக் குறை எழு நூற்
றொன்ப:: தென்ப உணர்ந்திசி னோரே.

இச்சூத்திரம் தொடைகளின் வரையறை கூறுவதாகும். இச்சூத்திரங்கட்கு உரைகண்டவர்கள் ஒவ்வொருவரும் ஒரு தொகை கண்டனர். அத்தொகை வந்தவகையை கூறுவதிலும் ஒவ்வொருவரும்தமது கற்பனைத்திறனுக்கும் புலமைக்கும் ஏற்ப முரண்பாடான கருத்துக்களைத் தந்துள்ளனர். இளம் பூரணர் 13699 என்ற தொகை கொண்டார் யாப்பருங்கல விருத்திகாரரும் இத்தொகையை ஏற்கின்றார். ஆனால் இத்தொகை வந்த விதத்தில் ஒருசீரான தெளிவான முறையில்லை. கணக்காசிரி ராலும் நினைவிற் கொள்ளமுடியாதபடி ஏதேதோ கணக்கிட்டுக் காட்டினும் பொருத்தமாக இல்லை. பேராசிரியர் 13708 என்ற தொகை கொண்டார். அத்தொகையும் முன்கூறிய சூத்திர அடித்தொகை 625ஐ 22தொடையுடன் பெருக்கிவந்த தொகையை மீண்டும் சிலவற்றைக் கழித்து தொகை பெறுகின் றார். கழிக்கின்ற வகையும் சிறப்பில்லை. ஆதலின் இதுவும் தெளிவான நேரடியானதொகைதரவில்லை. நச்சினார்க்கினியர் 'தொண்டுதலையிட்ட' என்ற சொல்லை ஒன்பதால் பெருக்கிய என்ற பொருள் கொண்டு தொகை கூறுவர். அதுவும் பொருத்த மில்லை என்பது தமிழறிஞர் அறிந்ததே.பேராசிரியர் உரையைப் பார்த்தால் (அவரது உரைச் செய்யுள்

களில்) அவர் தொகை பெற வலிந்தும் நலிந்தும் பொருள் கொள்வதும் இடர்ப்படுவதும்தெள்ளிதின் புலப்படும். தொல்காப்பியர் எளிதின் விளங்கு முறையில் சூத்திரம் செய்பவராதலின் இச்சூத்திரங் கள் இத்துணை கரடுமுரடான உரைகள் வரும்படி யாக அவர் சூத்திரங்களைச் செய்திருக்க மாட்டார். தொல்காப்பியத்துள்ள 1610 சூத்திரங்களிலும் இப்படி இடர்ப்பாடான உரை தரும் சூத்திரம் வேறில்லை என்பது தெளிவாகும்.

ஆதலின் இச்சூத்திரம் ஏதோ மாற்ற மடைந்து விட்டது என்றும் உரைகாண்பதும் தெளிவில்லை என்பதும் தெரிகிறது. ஆய்ந்து பார்ப்பின் இச்சூத் திரம் கீழ்க்கண்டவாறு இருந்திருக்குமென நிர்ண யிக்கலாம்.

மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே
ஐயீராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டு தலையிட்டபத்து- குறை- ஒருநூற்
றொருபஃ தென்ப உணர்ந்திசி னோரே

இதன் பொருள்:-

மெய்பெறு மரபின் தொடைவகைதாமே= எழுத் தொடு புணர்ந்த தொடைவகைகள் தான்

ஐயீராயிரத்து—இரண்டு ஐந்தாயிரத்து $5 \times 2 \times 1000 — 10000$

ஆறைஞ்ஞூற்றொடு—ஆறு ஐந்துநூறுகளுடன்- $6 \times 5 \times 100 \approx 3000$

தொண்டு தலையிட்ட பத்து— $9 \times 10 = 90$

13090

'தொண்டுதலையிட்டபத்து' என்றதும் முன்பிரயோகங்களை ஒட்டி 19 என்ற பொருள் கொள்ள வேண்டிவரும். இந்த மயக்க உணர்வைப் போக்கி தெளிவுறுத்தும் பொருட்டு''தொண்டுதலையிட்ட பத்து'' என்பதை விளக்கும் வகையில் ''குறை- ஒரு நூற்றொருபஃது''என்றார்என்று உணர்க. ''ஒருநூற்றில் ஒருபத்து குறை'' என்பது தொண்ணூறு ஆகும். இக்சூத்திரத்திலும் எண்ணின் மடங்கு நிரல்பட அமைக்க விரும்பி இச்சூத்திரம் இப்படிச் செய்தார் என்றுணரமுடியும். முதலில் $5\times2=1000$ (ஆயிரம் ஸ்தானம்)கூறிப்பின்$6\times5\times30\times100$(நூறுஸ்தானம்) கூறிப்பின்- $9\times10=90$ (பத்துஸ்தானம்) கூறியுள்ளார் என்பது தெளிவாகிறது. ஆனால் 'தொண்டு தலையிட்ட பத்து' என்பது பத்தொன்பதா? அல்லது தொண்ணூறு? என்ற ஐயம் போக்கவே 'குறை ஒரு நூற்றொருபஃதென்ப' என்று கூறியுள்ளார். ''ஆறைஞ் ஞூற்றொடு'' என்று ''ஒடு'' என்ற உருபு சேர்த்ததால் அடுத்த ஸ்தானம் பத்தின் மடங்கே வரவேண்டும் ஆதலின் ஒன்பது பத்து என்று கூறியுள்ளார். முதற்சூத்திரவிளக்கத்தில் கூறியதுபோல ,தொண்ணூறு' என்ற சொல்வழக்கு பொருளற்றது என்று உடன்படாமையால்தான் தொல்காப்பியர் தொண்ணூறு என்று கூறவிரும்பாமல் ஒன்பது பத்து என்றே கூறுகின்றார்.

இனி இந்தத்தொகை 13090 என்பதன் வகையை உரையாசிரியர்கள் போல் கூட்டிக் கழித்தும்,

பெருக்கிக் கழித்து கொண்டும் இடர்ப்படாமல் எளிதின் விளக்க முடியும். முன்சூத்திர விளக்கப்படி கண்ட அடி 595யும், பேராசிரியர், யாப்பருங்கல விருத்தி உரைகாரரர் போல; தொடைத் தொகை 22 உடன் பெருக்கின் 13090 என்றதொகை எளிதின் கிடைக்கும்.

''மோனை இரண்டாம் எதுகையோ ரெட்டாகும்
ஏனை முரணைந் தியைபொன்றும்- ஏனைப்
பொழிப்பாதி யைந்துங் குறிப்புத் தொடையோ
டிழுக்கா இருபத் திரண்டு''

என்ற யாப்பருங்கல விருத்தி மேற்கோள் பாடல் 22 தொடைவகைகளை தெளிவு படுத்தியுள்ளது. முன்னுரையாசிரியர்கள் 625 அடியுடன் 22 தொடைகளையே பெருக்கியுள்ளனர். ஆனுல் அத்தொகை 13750 வருதலின் வேறுவழியின்றி 51 நிலம் கழித்து 13699 என்ற தொகை பெற்றனர். நிலம் கழித்த முறையும் சிறப்பாக இல்லை. ஆதலின் நேரடியான எளிய முறையிலான 13090 என்ற தொகைக் கணக்கே பொருந்துவதாகும்.

இதுகாறும் கூறிய வாற்ருன் அடி தொடைகளின் கணக்கு எளிய தெளிவான முறையில் கணக்கிட்டுக்காண முடியும் என்பது விளங்கும். இந்த விளக்கத்தை ஏற்பின் சூத்திரப்பொருள் தெளிவாக இடர்ப்பாடின்றி விளங்கும்.

சீர்வகைஅடி	நிலம்	தளை	தொடை
5×	17×	7×	22= 13090

இந்த வகையில் ஒரு சீராக வரும் அடிகளின் கணக்கும் தொடைகளின்கணக்கும்பொருந்துவது காண்க

தொல்காப்பியத்தில் செய்யுளியலிலுள்ளஇவ்விரு சூத்திரங்கட்கும் சுயமான பாடபேதங்களுடன் ஆராய்ந்து விளக்கப்பட்ட இந்த எளிய முறையிலான தொகைக் கணக்கும் வகை விளக்கமும் தமிழறிஞர் உலகம் ஏற்குமென்றே கருதுகின்றேன். மேலும் நன் காய்ந்து புதிய விளக்கம் இதனினும் எளிதாக விளக்கினுல், தொல்காப்பியச் சூத்திரங்களுக்கு தெளிவான உரைகாணவேண்டும் என்ற நோக்க முடைய எமது வாழ்த்துக்கும் பாராட்டுக்கும்உரியர் ஆவார்கள். இன்று தமிழ் பெருமிதத்துடன் திகழ் கின்றது. இச்சூழ்நிலையில் தமிழைப்பற்றி சுதந்திர மான ஆய்வுரைகள் எழவேண்டும்.

தொல்காப்பியக்கடலில் இதுபோன்ற அரிய ஆராய்ச்சிக் கருத்துக்கள் உள்ளன. அந்தமுத்துக்களை அறிஞர்கள் வெளிக் கொணரவேண்டும். புத்தம் புதிய கருத்துக்களை எடுத்துக் காட்டவேண்டும். சிறந்த விளக்கங்கள் தரவேண்டும்: அது எதிர்கால சந்ததியினருக்கும் இலக்கிய இலக்கணப் புலமை யாளர்கட்கும் பயன்படும். இதுபோன்ற ஆராய்ச்சிக் கருத்துக்களை தொடர்ந்து விளக்கி வெளியிட இருக்கின்றோம். தமிழன்பர்கள் எமது முயற்சிக்கு ஆதரவளிப்பார்களாக.

அச்சிட்டோர்:

நந்தினி அச்சகம்

22, அங்கையராஜா தெரு.

இராஜபாளையம்.